Teachers Serving under Kallar Reclamation Scheme.

* 194 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that both secondary grade and higher grade teachers serving under Kallar Reclamation, Madurai district, have not yet been sanctioned Selection Grade Scale of Pay from 1st April 1974;

(*b*) whether it is a fact that the upgraded teachers have not been sanctioned secondary grade scale of pay;

(*c*) whether the services of the teachers appointed under Half-a-Million Job Programme have not yet been regularised; and

(*d*) if so, the action proposed to be taken thereon?

கள்ளர் சீர்திருத்தப் பணித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம், கள்ளர் சீர்திருத்தப் பணித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் உயர்நிலை ஆசிரியர்களுக்கும் தொடக்கநிலை ஆசிரியர்களுக்கும் 1-4-1974 ஆம் நாளிலிருந்து தேர்வுநிலை சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) பதவிநிலை உயர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு உயர்நிலைச் சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பணி இது வரையில் முறைப் படுத்தப்படவில்லையா?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) 1-4-74 முதல் இடைநிலை, இளநிலை ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது.

(இ), (உ) & (எ)—பரிசீலனையில் உள்ளது.

1978 மார்ச் 20]

திரு. பி. ஆர். தாமஸ்: பல ஆண்டுகளாக பட்டதாரி ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் அந்தந்த ஆண்டுக்குரிய ஊதிய உயர்வுகள் அளிக்கப்படாமலிருக்கின்றன. மேலும் தேர்வு நிலையும் வழங்கவில்லை. 1-4-1974-லிருந்து இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1-4-73-லிருந்து பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பல ஆசிரியர்களுக்கு 24-10-1977 ஆம் தேதியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த ஊதியம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. கால தாமதத்திற்குக் காரணம் ஒவ்வொருவருடைய கோப்புகளையும் பார்த்து யார் யாருக்குத் தகுதி இருக்கிறது என்று பார்க்கப்படுவது. அதைப் பற்றி அறிந்துகொள்வதில் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டது. ஆகவே இத்தேர்வு நிலை தருவது பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: கல்வித் துறை ஆணைகளை ஹரிஜன நலத் துறையில் நடைமுறைக்குக் கொண்டுவருவதால் தான் காலதாமதம் ஆகின்றது. அந்த ஹரிஜன நலத் துறையில் உள்ள ஆசிரியர்கள் அதனால் தொல்லைக்குள்ளாகின்றார்கள். அதைக் கல்வித் துறையினர் அமுல் செய்யவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தத் துறைக்கு அறிவித்திருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சில நேரங்களில் அரசாங்கம் இடுகின்ற ஆணைகள் கல்வித் துறையைச் சேர தாமதம் ஆகிறது. அதற்குப் பிறகு கல்வித் துறையிலிருந்து ஹரிஜன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை ஆகிய வற்றுக்கு அந்த ஆணைகள் வர காலதாமதம் ஆகின்றது. அந்த ஆணைகளைப் பெற்ற பிறகு, ஒவ்வொருவரைப் பற்றிய குறிப்புக்களை, கோப்புகளைப் பார்த்து, யார் தகுதியுள்ளவர்கள் என்று பார்க்க வேண்டும். தேவையான அலுவலர்கள் இல்லாத காரணம் வேறு இருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு அந்த ஆணைகளுக்குரியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]